உ

சிவமயம்.

தஞ்சைமாநகரம் மேலவீதி

காமாட்சியம்மை

பதிற்றுப்பத்தந்தாதி.

கலிவெண்பா.

இவை

ஸ்ரீசுயம்பிரகாசசுவாமிகள் பரம்பரையில்

திருவையாற்றிலெழுந்தருளிய

சிவாநந்தசுவாமிகள் மாணாக்கருளொருவராகிய

தஞ்சைமாநகரம்

கரந்தையம்பதியிலிருக்கும்

ந. வீரபத்திரபிள்ளையால்

இயற்றப்பட்டு

அரவக்குறிச்சியென்று வழங்குகிற

விஜயநகரம்

ம-ா-ா-ஸ்ரீ இராமசாமிமுதலியாரவர்களால்

தஞ்சாவூர் - சதாவதானம்

சுப்பிரமணிய ஐயரவர்களது

சென்னபட்டணம்

வித்தியாவர்த்தனி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

சாலியவாகன ௵ ௧௮௦௫-ல் நிகழ்கின்ற விஷு ௵

துலாரவி.

உ

சிவமயம்.

சிறப்புப்பாயிரங்கள்.

தஞ்சைமாநகரம் சதாவதானம்.
சுப்பிரமணியஐயரவர்களியற்றிய
நேரிசைவெண்பா.

இந்திரன்செய் மாமகமோ வெண்கணன்வாழ் வீட்டிதமோ
மைந்தர்களி னுயுள் வருடமோ—வந்து
மதிற்றஞ்சை வீரபத்ர மாகவிஞன் சொற்ற
பதிற்றுப்பத் தந்தாதிப் பா.

தஞ்சை மிஷியோன்காலேஜ் தமிழ்த்தலைமைப்புலவரும்
திரிசிரபுரம்
மஹாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்
மாணாக்கருளொருவருமாகிய
மு. ஐயாச்சுவாமி பிள்ளையவர்க ளியற்றிய
எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அந்தணர்வாழ்த்தாரணங்க ளார்ப்போங்கையாற்
றமர்ந்தசிவா னந்தகுரு பரன்றாட் போதைப்
பந்தமறத் தன்முடிசேர் வீர பத்ரப்
பாவலன்ற னுளத்தடத்திற் பூத்த நாற்சொற்
கந்தமலர் கொடுபதிற்றுப் பத்தந் தாதி
கலிவெண்பா வெனவிரண்டு கண்ணி கோத்துச்
சுந்தரஞ்சேர் தஞ்சைக்கா மாட்சிதோண்மேற்
சூட்டினன் வீட்டினெறி காட்டினனே.

ஷை புலவர் மாணாக்கருளொருவரும்
தஞ்சை முன்சீபால் யூனியன்ஸ்கூல் தமிழ்ப்புலவருமாகிய
மாரிமுத்து வுபாத்தியாயரவர்க ளியற்றிய
எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மாட்சிமைசேர் சிவானந்த வடிகட் பாத
　　மலரையனு தினமனத்தில் வைத்து நாவி
னாட்சியுறு வீரபத்ரக் கவிஞ னன்ன
　　மகலாத வயல்சூழுந் தஞ்சை யிற்கா
மாட்சியம்மை மேற்பதிற்றுப் பத்தந் தாதி
　　மன்னுகலி வெண்பாவும் வகுத்தா னன்பு
நீட்சிபெறத் தவங்கடவுஞ் செய்ய விந்த
　　நிலவலயத் துதித்திட்ட நிமல னம்மா.

ஷை ஐயாச்சுவாமிப் பிள்ளையவர்கள்
மாணாக்கருளொருவராகிய
ஆதிமூல உபாத்தியாயரவர்க ளியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

திருமருவு மையாற்றிற் சிறந்தோங்குஞ் சிவானந்தன்
　　றிருத்தாட் கன்பு
மருவலுறு நாவலர்கோன் வீரபத்தி ரக்குரிசால்
　　வரைந்த விந்தப்
பெருமிதஞ்சேர் பதிற்றுப்பத் தந்தாதி கலிவெண்பாப்
　　பிறங்கு நூற்கள்
கருவதனிற் றொடக்கறுக்குங் கருவியா மெனவுலகோர்
　　கருது வாரே.

தஞ்சைமாநகரம்.
கோட்டைக்குள் வடக்குவீதி
S. P. G. ஸ்கூல் உபாத்தியாயர்
இராமையாவஸ்தாதவர்களியற்றிய
அறுசீர்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பார்கொண்ட பல்லுயிரைப் படைத்தழித்துக் காக்குமொரு
பரமன்பங்கில்
ஏர்கொண்ட வருளுருவாந் தஞ்சைக்கா மாட்சிடம்மை
யிருதாட்கன்பாய்
வீர்கொண்ட சிவாநந்த தேசிகன்றூண் மறவாத
வீரபத்ரன்
நார்கொண்ட பதிற்றுப்பத் தந்தாதி கலிவெண்பா
நவின்றான்மன்னே.

கருவூரைச்சார்ந்த வன்மீகபுரம்.
நித்தியாநந்தசுவாமிகள் ஆதீனத்தவர்களாகிய
நல்லமாகாளிப்பட்டி
சு. துருசாமித்துருக்க ளவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

இம்மைக்கோ ரருள்விருந்தா மறுமைக்கோ ரருமருந்தா
யெவர்க்குந் தோன்றச்
செம்மைக்கே மனம்பரவும் வீரபத்ர நாவலவன்
சிந்தை கூர்ந்து
மும்மைக்கோ தகன்றவரோத் தெழிற்றஞ்சைப் பதிவருந்தேன்
மொழிக்கா மாட்சி
அம்மைக்கோர் பதிற்றுப்பத் தந்தாதி கலிவெண்பா
வமைத்தான் மன்னே.

சிறப்புப்பாயிரங்கள்.

கரைவட்டன்குடி
சுப்பிரமணிய பாரதிகளவர்கள்
மாணாக்கருளொருவராகிய
வெட்சியூர் அருணாத்திரிஐயரியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

பெருந்தடமா மதிற்றஞ்சைக் காமாட்சி யம்மைபுகழ்
பேணிக் கற்போர்
விருந்துணுமா றருந்தவத்தின் வீரபத்ர நாவலனும்
விண்டு நாவாற்
றிருந்தமிழ்தாப் பதிற்றுப்பத் தந்தாதி கலிவெண்பாத்
திரட்டித் தந்தான்
பொருந்துறவச் சிட்டதனை யிராமசா மிக்குரிசில்
புகழ்பூண் டானே.

திருவையாறு-ஸ்ரீசிவாநந்தஸ்வாமிகள்
மாணாக்கருளொருவராகிய
கருவூரைச்சார்ந்த நல்லமாகாளிப்பட்டி
சு. தெய்வசிகாமணிக் குருக்களவர்களியற்றிய
ஆசிரியவிருத்தம்.

சீர்தந்தநித்யசுக சிற்சுயம்பிரகாச
தேசிகேசன்மரபினிற்
செங்கமலவாவிசூழ் பஞ்சநதிமேவிய
சிவாநந்தநாதனடியை
வார்தந்ததன்சித்த சுத்தாதனத்தினிதம்
வைத்திசைகொள்வீரபத்ர
வள்ளலன்பொடுபதிற் றுப்பத்தினந்தாதி
மன்னுகலிவெண்பாவுநன்

கார்தந்ததஞ்சைவா ழும்மைகாமாட்சிக்
களித்தனன்புவிமீதிவை
அன்பரெல்லாங்கற் றறிந்திடற்குதவியா
அரவக்குறிச்சியின்கண்
எர்தந்தசற்குண மெலாந்திரண்டோர்வடி
வெடுத்திருவகைப்பொருளுமார்ந்
திலகுறுமிராமசா மிக்குரிசிலெழுதா
வெழுத்திற்பதித்தனனரோ.

சிறப்புப்பாயிரங்கள் முற்றிற்று.

உ

சிவமயம்.

அருட்பதப்புகழ்ச்சி.

கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

சீர்மேவுநித்யபரி பூரணாகாரசற்
சிற்சுகவிலாசமாகிச்
செப்பருமருட்பெருஞ் சோதியாயருமறைச்
சென்னிமிசைமன்னும்பதஞ்
சீவாவனியுளோர் மேவரும்பதமஷ்ட
சித்திவிளைவிக்கும்பதஞ்
சித்தார்த்தநிலையையங் கைக்காட்சியென்னமெய்ச்
சிட்டருக்கருளும்பதங்
கார்மேவுமஞ்ஞான விருளகலஞானமெய்க்
கதிரொளிவிரிக்கும்பதங்

கணிதமுறுமறுவகைச் சமையசங்கற்பங்
  கடந்தநிற்குணமெய்ப்பதங்
கருதடியரெண்ணப் படிக்கின்பமருளருட்
  கற்பகத்தருவாம்பதங்
காணலுறுமண்டகோ டிகளெலாமாய்த்துக்
  கணத்திலுண்டாக்கும்பதம்
ஏர்மேவுசிற்ககன சினகரத்தனவரத
  மெதிரறத்திகழ்பூம்பதம்
இருவகையறத்தினரு முறைமுறையுளங்கனிந்
  தின்சொன்மலரணியும்பதம்
இரவிமுதலாயவெண் பிரபைக்குமொளிதந்
  திலங்குசைதன்யப்பதம்
இருவினைப்புணரியின் றேறவெற்கோர்மொழி
  யெனும்புணையளிக்கும்பதந்
தார்மேவுபணியெனத் தோற்றுமகிலாண்டமாஞ்
  சத்திசத்தாம்பொற்பதந்
தத்துவவியூகங்க ளற்றொருதுவாதசாந்
  தத்திலகுமுண்மைப்பதந்
தாரணியிலன்பருக் கின்பருளவருண்மேனி
  சார்ந்தெழுந்தோங்கும்பதந்
தஞ்சைவாழ்மாட்சியமை விஞ்சுகாமாட்சியுமை
  தண்டைத்திருப்பாதமே.

உ

சிவமயம்,

தஞ்சைமாநகரம் மேலவீதி
காமாட்சியம்மை
பதிற்றுப்பத்தந்தாதி.

கடவுள்வாழ்த்து.

விநாயகர்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

திருத்தஞ்சை மாநகர்வாழ் காமாட்சி யம்மையிரு
செய்ய தாளிற்
கருத்தஞ்சேர் பதிற்றுப்பத் தந்தாதித் தொடையணிவா
னனக மன்றுள்
நிருத்தஞ்செய் தியானெனதற் றவரிதையப் பதியுறைந்து
நிமல போதம்
அருத்தஞ்சக் கரத்தனரு ளொருத்தன்முகத் தொருத்தனடி
யகத்துள் வைப்பாம்.

நடேசர்.

வேறு.

கற்பனை கடந்த வன்பர் கருத்தினுங் கலைகட் கெல்லாம்
முற்படு மறைக ளென்கின் முடிவினு முனிவர் சூழும்
அற்புத மணிமன் றுள்ளு மருணடம் புரியு முக்கட்
[illegible]ர னுபய பாதச் செழுமலர் சென்னி சேர்ப்பாம்.

முருகக்கடவுள்.
கலிவிருத்தம்.

விண்முகத்தினர் விக்கினமாற்றியென்
கண்முகத்தனைக் காவல்புரிந்துமெய்
உண்முகத்தினர்க் குள்ளுணர்வாயொளிர்
சண்முகத்திறை தாண்மனத்துன்னுவாம்.

கலைமகள்:
வேறு.

எப்புவ னத்துறு மெப்பொருள் சட்குரு
மெய்ப்பற வற்பொடு நிற்பாளாய்த்
தப்பறு முத்தர்க ணித்தமு வப்புறு
தற்பரா முக்கணெ ழிற்பாவை
அற்புறு மெய்ப்புக ழுக்குயர் கற்பனை
யற்புத வாக்கினி தெற்கியும்
ஒப்பரு நற்படி கப்படி வத்தெழி
லுத்தமி பொற்சம லத்தாளே

பரமாசாரியர்.
வேறு.

பொன்னிடத்திற் பற்பலவாத் தோன்று நின்ற
பூடணங்க ளெல்லாமப் பொன்னே யன்றி
உன்னுமிடத் தன்னியமோ ரணுவு மில்லா
வுண்மையென வகிலாண்ட மனைத்து மாகித்
துன்னுபரி பூரணமா யனந்த ஞான
சூரியர்க டோன்றுமொரு பரம விண்ணாய்
மன்னியொளிர் பஞ்சாக்ஷர நாதன் செய்ய
மலர்ப்பாதந் தலைக்கணியா வைத்து வாழ்வாம்.

அருளிறைவணக்கம்.

வேறு.

திவாநந்த மூடிருள்போ லான்மாக்கண் மதிமறைக்குந்
 திணையா மும்மை
அவாநந்த வருட்கண்மலர்ந் தாநந்தா காரநிலை
 யடியேற் கீவான்
தவாநந்த நம்பொலியை யாற்றினெழுஞ் சின்மயமார்த்
 தாண்ட னுமெய்ச்
சிவாநந்த குருநாதன் செங்கமலப் பூஞ்சரணஞ்
 சிந்தை செய்வாம்.

கடவுள்வாழ்த்து முற்றிற்று.

நூல்.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சீர்வளர் கமல மலர்த்தவி சிருக்குஞ்
 செம்மலுந் திசைகடற் றுகில்பூண்
டேர்வளர் புவன முழுதுமுண் டுமிழ்ந்த
 விறைவனுங் காணரும் பரனை
வார்வளர் வலப்பால் வைத்தவல் லமையாய்
 மைந்தனேன் மனத்துய ரொழித்தாள்
ஆர்வளர் புகழ்சேர் தஞ்சைமா நகர்வா
 ழும்மைகா மாட்சியா ரணங்கே. (க)

ஆரணம் பரவு மருமறைப் பொருளே
 யன்பினி லெழுந்தவா ரமுதே
வாரணம் பரநே ரம்பகத் தவர்மான்
 மருவுறு ருளத்துறு மணியே

காரணம் பரரும் போற்றுசீர்த் தஞ்சை
நகரில்வா ழும்மைகா மாட்சி
காரணம் பரவு நின்றிரு வடியான்
கண்ணுறக் காணவந் தருளே. (௨)

அருள்வண மாகி யெங்குநீ யிலங்கு
மடைவறிந் துய்வுறு தவமே
உருள்வணச் சகட வாழ்வினை யுளதென்
றுன்னியிங் குழன்றுழன் றிதையம்
மருள்வண மருவா வண்ணநின் னருளா
மணிவிளக் கொளியளித் தருள்வாய்
தெருள்வணப் புனல்சூழ் தஞ்சையம் பதிவாழ்
தேவிசா மாட்சிமா தரசே. (௩)

மாதனந் தேவி மகவெனு மும்மை
மயக்கடைந் தாறுடல் வளர்ப்பான்
ஓதனந் தேடற் குழைப்பில்வாழ் நாட்க
ளொழிவுறு முன்னரோர் நான்கு
சாதனந்தேற வெனக்கருள் சகத்ர
தளமலி நளினமா மலரின்
ஆதனந் தேங்கித் தஞ்சையம் பதிவா
ழும்மைகா மாட்சியந் தரியே. (௪)

சரித்தொருமொழியை யடிகள்பால் வினவிச்
சதுர்மறை யாகம முடிவை
விரித்தொருங் குணர்ந்து விடையவா சனையை
விடுத்தனு தினமுமெய்ந் நெறியிற்
சரித்தொரு மனதாய் நிற்கவென் றருள்வாய்
சகம்புகழ் தஞ்சைவா ழமுதே

சிரித்தொரு கணத்திற் புரங்கண்மூன் றெரித்தோன்
றேவிகா மாட்சிநிற் பரியே. (ரு)

பரிபுரந் தரித்த நின்பதத் துகளின்
பலங்கொடு சகத்தெலா மயன்செய்
தரிபுரந் தரன்மாற் றுவனெனி னின்சீ
ரறையவெற் கெளியதோ வெழிற்சுந்
தரிபுரந் தரனும் பணிபுரி யரசே
தாதவிழ் மலரகந் தொறும்பல்
வரிபுரந் தழுவும் பொதும்பர்சூழ் தஞ்சை
மன்னுகா மாட்சியம் மணியே. (சு)

மணிப்பணி பரிக்குஞ் சகத்தினின் வடிவை
மனத்தொடு காயம்வாக் கொன்றாய்
எணிப்பணிந் தேத்தி யகமிதந் தோன்ற
திருக்கவெற் கருளுத லிணர்ப்பூங்
கணிப்பணி பூத்த மரகதக் கொடியே
கற்றுண ரருந்தவர் தினம்வந்
தணிப்பணி புரியுந் தஞ்சையம் பதிவா
ழாதிகா மாட்சிநின் பரமே. (எ)

பரம்பொரு ளாய்ந்த மெய்யடி யவர்தாட்
பங்கய மலர்க்களி யொடுகாத்
திரம்பொரு ளாவி மூன்றுமீந் தன்னோர்
திருக்கணைக் கிசைந்துமெய்ஞ் ஞான
வரம்பொருங் குணரா நாயினுங் கடைய
வஞ்சனேற் குன்னடி வழுத்துந்
திரம்பொருந் தியதென் றஞ்சையம்பதிவாழ்
செல்விகா மாட்சிமங் கலையே. (அ)

கலைமதிக் கருகிற் சுரநதி யையுஞ்சே
கரத்தணிந் துவண்கே தனனாந்
தலைமதிக் கடுத்த மதியிரா சியின்பேர்
தரித்தவா கனத்துளான் மனையே
விலைமதிக் கரிய மாடநீள் தஞ்சை
விளங்குகா மாட்சியே யினியான்
நிலைமதிக் கலைஞர் வியப்பநின் றுதியை
நிரந்தரஞ் செயற்கருள் புரியே. (கூ)

புரியிலஞ் சிறந்த புனிதர்மா தவர்வான்
புலவரு முறைமுறை தொழப்பாம்
புரியிலஞ் சியும்விண் புறந்தழீஇ யுயர்கோ
புரங்களு மிலங்குசீர்த் தஞ்சைப்
புரியிலஞ் சிலம்பு புனைந்துவீற் றிருக்கும்
பூவைகா மாட்சியெற் கருணீ
புரியிலஞ் சியம புரம்புகா நிலையான்
பொருந்துதற் கையமொன் றிலையே. (௧0)

வேறு.

இலையோ வியமெய்த் துறவர்சூழாத்
தெனைவைத் திருக்க விடமிலையோ
நிலையோ வியம்போ லென்னுளத்தை
நிற்கப் பணித்த னினக்கரிதோ
சிலையோ விரும்போ நின்னிதையஞ்
சிறியே னுனாயுன் செவிக்கேற
இலையோ வியம்பாய் தஞ்சைவள
ரெழிற்கா மாட்சி யென்னனையே. (௧௧)

அனைத்தும் புரிய வல்லாய் நீ
யடியேன் பாங்க ரணுகுமிரு

விலைத்தன் பொழித்து மெய்யுணர்வை
விளக்கி யுனது மென்பதத்தை
நினைத்து மறவா நன்னிலையை
நிகழ்த்த லரிதோ முகிற்குலங்கள்
கனைத்துப் பொழியுந் தஞ்சைநகர்க்
கவின்கா மாட்சி யஞ்சுகமே. (௧௨)

அஞ்சைப் பதியும் பொறிவழிச்சென்
றலையுஞ் சித்தர் கூட்டுறவான்
மஞ்சைப் பதித்த கருங்குழலார்
வாஞ்சைக் கிணங்கா வரமருள்வாய்
நஞ்சைப் பதித்த கறைமிடற்று
ளைத்து மலையான் புத்திரியே
தஞ்சைப் பதிவாழ் காமாட்சித்
தாயே சரணஞ் சரணுனக்கே. (௧௩)

சரணத் தொலிக்குஞ் சிலம்பழகுஞ்
சரிக ளொலிக்குங் கரத்தழகும்
பரணத் தொளிசே ரிடையழகும்
பணிகொண் மார்பு மலர்முகமுங்
கரணத் தொடுமிந் தியம்பொருந்திக்
காண வருவாய் காமாட்சி
அரணத் தொடுகார் முகிலணையு
மழகார் தஞ்சை வருந்திருவே. (௧௪)

வருந்தா தருமை மகவினைத்தாய்
வளர்க்கு முறைபோ லடியருளத்
திருந்தா தரித்து மெஞ்ஞான
வின்ப மளிக்கும் பூரணியே

அருந்தா தவிழு மலர்த்தொடையா
யணிசேர் தஞ்சைக் காமாட்சி
கருந்தா தனைய வென்னிதையங்
கனியப் புரியக் கடனுனக்கே. (கரு)

கடலிற் றிரைபோ லிருவினையாங்
கயிற்றிற் பிணிப்புண் டிகத்திலுழன்
றுடலிற் றிடுமுன் னின்பதத்தை
யொன்றற் கருள்வாய் மறைமலரின்
முடலிற் றிகழ்மா மகண்முகமா
வயங்குந் தஞ்சைப் பதிவதியும்
அடலிற் றிருந்துங் காமாட்சி
யம்மே பவநோய்க் கருமருந்தே. (கசு)

மருந்து மறியே னின்னெழுத்தை
மனனித் தறியேன் பொறியடக்கி
இருந்து மறியே னிருந்தவரோ
டிணங்கி யறியே னென்செய்வேன்
திருந்து மறியே யிணைவிழியாய்
சீர்சால் தஞ்சைக் காமாட்சி
பொருந்துமறியா மையையகற்றிப்
போத நிலையான் புல்குதற்கே (கஎ)

புல்லுங் கருணை கரியேயான்
புவியிற் புலம்பு மொழிகேட்கிற்
கல்லுங் கரையு நின்னிதையங்
கனியா தென்ன காரணமோ
அல்லுங் கதிருங் கடந்துநின்ற
வரசே தஞ்சைக் காமாட்சி

வில்லுங் கயலு நிகர்த்தநுதல்
விழியாய் செழுந்தேன் மொழியாளே. (கஅ)
மொழியைக் காட்டு மறைநூலின்
முடிவைக் காட்டி மெய்யுணர்வாம்
விழியைக் காட்டி யகண்டபர
வெளியைக் காட்டி நாசிமுனைச்
சுழியைக் காட்டித் துரியமெனுஞ்
சோதி காட்டி நினைக்காட்டும்
வழியைக் காட்டாய் தஞ்சைநகர்
வருங்கா மாட்சி யருந்தனமே (க௯)

தனமா தவனி விருப்பகன்ற
சான்றோர்க் கெளியாய் மனாமலரா
தனமா தவனிந் திரன்றெழுநின்
சரணும் புயத்திற் காயிரம்வந்
தனமா தவற்காண் பணியெனவே
தமியேன் வினைதீர் தாற்கருள்சே
தனமா தவர்சூழ் தஞ்சைவருந்
தனிக்கா மாட்சி யருட்கொடியே. (உ௦)

வேறு.

கொடியாரு முனதுதிரு நாம மோர்காற்
கூறுவரே லன்னவர்தங் குறைகடீர்த்துன்
கடியாரு முளரிமல ரடிவாழ்த் தன்பர்
கணத்துடன்சேர்த் தருளுவதுன் கருணை யன்றோ
மிடியாரு முளத்தினனாய் மெலிந்து நின்றுள்
வேண்டுமெளி யேன்றனையிவ் வேளை காவாய்
படியாரு முதுமறையோர் பரவுந் தஞ்சைப்
பதியாருங் கரமாட்சி பசும்பொற் குன்றே. (உக)

குன்றேங்கு மணித்தீபக் கொழுந்தே சேவக்
குகைதோறுங் குடிபுகுநிற் குணமே செம்பொன்
மன்றேங்கு மகிபன்மகிழ் மானே தஞ்சை
மாநகர்வாழ் காமாட்சி மயிலே யென்னுள்
நின்றேங்கு மதியமுதே நின்னையன்பா
னினைந்துருகு மெளனப்புரக்க நினையா யாநின்
என்றேங்கு மகண்டிதசன் மார்க்க முத்தி
யின்பமிலே பெற்றிருப்பே னேழை யேனே. (உஉ)

ஏனவடி வன்னவடி வெடுத்து மாயோ
னெண்கணன்முன் னிம்பரும்ப ரிருத லித்தும்
ஆனவடி முடிகாண்டற் கரிதா யீச
னழலுருவம் பூண்டதுநின் னாற்ற லன்றே
ஊனவடி வெடுத்தியமற் காளாய்ப் பாரமீ
துலையாத வண்ணமெனக் கொளிகா லுண்மை
ஞானவடி வளிப்பதுனக் கரிதோ தஞ்சை
நகர்வாழுங் காமாட்சி நளினக்கண்ணாய். (உங)

கண்ணுடி மறைநாடிக் கலைக ணுடிக்
கதிநாடி மதிநாடிக் கற்றே ரோதும்
பண்ணுடிப் பெயர்நாடிப் படிவ நாடிப்
பரமகுரு மொழிநாடிப் பன்னு ளென்றன்
உண்ணுடி நோக்குறுங்கா லுனைய லாதென்
னுயிர்த்துணையிங் கொன்றேனு முலகிற்காணேன்
எண்ணுடிப் புகலரிய வியன்சேர் தஞ்சை
யிடத்துறையுங் காமாட்சி யின்பத்தேனே. (உச)

இன்புடையா ரறிவுடையா ரெவரு மேத்து
மெழிலுடையா ரிசையுடையா ரெருமை யூருங்

தென்புடைமா திரமுடையாற் கஞ்சி யுள்ளஞ்
சிறிதுடையாத் திறலுடையார் திசையோ ரெட்டும்
வன்புடையா விசித்ததுடி யிடையாய் நான்கு
மறையரவ முழங்குறுநின் மலர்த்தாட் கென்றும்
அன்புடையா மனமுடையா ரானோர்தஞ்சை
யம்பதிவாழ் காமாட்சி யருமைத் தாயே. (உ௫)

அருந்தவத்தின் முயன்றுபழ வடியா ரெல்லா
மனுதினமு நினதுபய வடிமலர்த் தேன்
அருந்தவடி யேனுணரா தின்று காறு
மவத்திலுழைத் தேனினியென் னாவி யுள்ளந்
திருந்தவளந் திகழ்தருநின் றிருக்க ணோக்கஞ்
செயுநாளென் றுரைத்தியுயர் செம்பொன் மாடம்
வருந்தவளப் பிறையைமகார் கரந்தொட் டாடி
மகிழ்தஞ்சைப் பதிவதிகா மாட்சி மாதே. (உ௬)

மாதரியா மலையிமைய வல்லி சூலி
வாமியபி ராமிமனோன் மணியம் பாள்கங்
காதரியா ரணிகருணா கரியோங் காரி
காரியா காரிமகிழ் கவுரி மாயோன்
சோதரியா நந்தபர சுகுண வீரி
சுந்தரியென் றுனைத்துதிக்குந் தொழும்ப னேனை
ஆதரியா விடிற்கதிவே றறியேன் றஞ்சை
யம்பதிவாழ் காமாட்சி யமல வாழ்வே. (உ௭)

அமலமா யகண்டபரி புரண மாநின்
னடியரடிப் பணிபுரியா வறிவீ னத்தால்
முமலமாந் திரையெறியேழ் பிறவி யென்னு
முந்நீரி லாழ்ந்தாழ்ந்து முத்தி யென்னும்
விட்லமால் வரையேறத் துறைகாணுமன்

மிகத்தளர்ந்துள் ளயர்ந்துருகும் வினையி னேற்குக்
கமலமா மலர்த்தடஞ்சூழ் தஞ்சை வாழுங்
காமாட்சி யுன்கருணைக் கலனீ வாயே. (உஅ)

வாயிருக்கப் புகலறியா மூங்கை போலு
மரமிருக்கக் குழைகாய்ந்த வாறு போலும்
பாயிருக்கப் புழுதியிடைப் படுப்பார் போலும்
பதியிருக்கத் தெருவிலலை பாவை போலுந்
தாயிருக்கப் புலம்பியழுஞ் சேயர் போலுஞ்
சந்ததமு மென்றனிரு தயத்திற் சார்ந்து
நீயிருக்கப் புவியிலியான் றவித்த னன்றோ
நிறைதஞ்சைக் காமாட்சி யருடந் தாளே. (உகூ)

தந்தனத்தா னடியேற்கித் தனுவை யின்றுன்
ருண்மலரைத் துதிக்கவமைத் ததுவுஞ்சந்த
தந்தனத்தா னமரர்முத லானோ ரெண்சீர்
சார்ந்ததுவு நின்னருளா லன்றோ வொற்றைத்
தந்தனத்தா னந்தபரா சத்தி தாயே
சகத்துழியுற் பவத்திலினித் தரித்தோ ரன்னே
தந்தனத்தா லமுதருந்தா வரந்தா தஞ்சைத்
தலத்துறைகா மாட்சியறம் வளர்த்த மாதே. (௩0)

வேறு.

வளம்பதி வயல்சூழ் தஞ்சை மன்னுகா மாட்சி தாளில்
உளம்பதி வுறுஞ்சீ ருற்றோ ரும்பர்தம் பெருமான் வாழ்வுந்
தளம்பதி மலரோன் வாழ்வுந் தண்மதி முகத்து மாம
வளம்பதி வாழ்வும் வாழ்வாக் கண்டுளங் களிகொள் ளாரோ. ()

களிக்கிலே னின்றாட் டொண்டர் கணத்துடன் கூடி யுள்ளஞ்
சுளிக்கிலேன் மாய வாக்கை சுமையெனக் குறித்து ஞாலத்

துளிக்கிலே சங்க ளோய்ந்தின் றய்குவே னெற்கோ ருண்மை
அளிக்கிலே ரமையுந் தஞ்சை யமர்ந்தகா மாட்சி யம்மே. (௩௨)

அம்மையா யப்பனாகி யனைத்துயிர்க் குயிரா யோங்குஞ்
செம்மையா மறிவாய் நிற்குஞ் செல்வியே திமிர மென்னும்
மும்மையாஞ் சஞ்சி தாதி மூடரு தருட்க ணோக்கி
எம்மையாட் கொள்வாய் தஞ்சை யிலங்குகா மாட்சி மாதே. ()

தேடினேன் றரணி முற்றுந் தெய்வநின் னையந்தோன் றுமல்
வாடினேன் றஞ்ச மென்றுன் மலரடிக் கிப்போ துள்ளம்
நாடினேன் றஞ்சை வாழு நங்கைகா மாட்சி நின்சீர்
பாடினேன் றகவுற் றேனோர் பற்றுமற் றறிந்தி லேனே. (௩௪)

அறிபடும் புலன்கட் கெட்டா வகண்டமா யடியா ருள்ளிற்
குறிபடும் புதுமைத் தாய கொள்கையா முனது சீரைப்
பிறிபடும் புரத்தை யோம்பும் பேதையே னோதற் பாற்றோ
செறிபடும் புகழ்சேர் தஞ்சைச் செல்விகா மாட்சி யன்னே. ()

மாட்சியா ரணங்க ளாக மங்களின் மறைகட் செல்லாம்
ஆட்சியா யாவி யீச னம்புவி யோர்முன் றிற்குஞ்
சாட்சியா யிலங்குன் ஞானத் தனுவினைத் தஞ்சை வாழ்கா
மாட்சியா ரணங்கே நாயேன் வகுத்துணர்ந் திடலெவ் வாறே.

எவ்வியங் களுக்கு நீயே யேதுவாம் பொருளென் றுள்ளங்
கவ்வியக் கசையா நிற்குங் கருத்தலாற் பிறிதொன் றுன்னேன்
அவ்வியங் கலவா நெஞ்சத் தருந்தமிழ் வல்லோ ரோத்தும்
நவ்வியங் கரத்தாய் தஞ்சை நண்ணுகா மாட்சி மின்னே. (௩௭)

மின்னலங் குமிழி மானு மெய்யினை மெய்யென் றுன்னி
இன்னலங் குறித்து வாழ்நா ளிழக்குமெம் மவரோ கேண்மின்
பன்னலங் குலவுந் தஞ்சைப் பதியிடை வதிகா மாட்சித்
தென்னலங் குறுதாட் சேவை செயிற்சதா நந்த மாமே. (௩௮)

நந்தமார் தடஞ்சூழ் தஞ்சை நகருறை தருங்கா மாட்சி
அந்தமா தியுமற் றேங்கு மடிபணிந் தேத்த வல்லார்
கந்தமா தியபு லத்தாற் காணொணுக் காட்சி யெய்தி
இந்தமா திரத்திற் சித்தி யாவையும் பெறவல் லாரே. (௩௯)

வல்லய மன்ன நெஞ்ச வஞ்சனே னுற்ப வங்கா
வல்லய மன்ன விற்கை வல்லிய நிலையெந் நாண்மே
வல்லய மன்ன மல்கும் வாவிசூழ் தஞ்சை யிற்கை
வல்லய மன்ன் ரேத்தும் வல்லிகா மாட்சி மானே. (௪0)

வேறு.

மாஞகத் தோலு மணிநாகப் பூணுமணி
கோஞகத் தோர்பாற் குடிபுகுந்த மாதேவே
தாநாகத் தோர்பரவத் தஞ்சையமர் காமாட்சி
நாஞகத் தோமருவா நல்லுணர்வு தந்தருளே. (௪௧)

தந்துலவுஞ் சிற்றிடையார் தங்கண்முகத் திங்களொளி
வந்துலவச் சேதாம்பல் வாவிதொறும் பூத்தமலி
தந்துலவுந் தஞ்சைத் தலத்துலவுங் காமாட்சி
முந்துலவுஞ் சன்மார்க்க முத்தியுற லெப்போதே. (௪௨)

எப்பாருங் கண்டுவக்கு மேற்றமிகுந் தஞ்சைவளர்
ஒப்பாருஞ் செப்பரிதா முன்னதஞ்சேர் காமாட்சி
அப்பாருஞ் செஞ்சடிலத் தண்ணலுடன் வந்தெனக்குன்
துப்பாருஞ் செவ்வாயாற் சொல்லமுத மொன்றருளே. (௪௩)

அருவாகி யண்டபகி ரண்டமெலா நின்றவருள்
உருவாகித் தஞ்சைநக ருற்றுலவுங் காமாட்சி
வெருவாகி யைவழியான் மேவா துனைநினைந்தின்
புருவாகி நின்றிடுநா ளுண்டிலையென் றேதாயே. (௪௪)

ஓங்குமணி யொன்பா னொளிர்தஞ்சைக் காமாட்சி
ஈங்குமன மெண்ணியவை யெற்கருள்செய் யாவிடினும்
பாங்குமலிந் தென்னகத்திற் பாற்பிரிவற் றெஞ்ஞான்றுந்
தாங்குமறி வர்கியநின் சம்மதம்போ லின்றமையே. (௪௫)

மையேந்து கண்ணார் வளையேந்து மாமலர்ச்செங்
கையேந்திப் பைங்கூழ் களையேந்து றாதெடுக்குஞ்
செய்யேந்துந் தஞ்சைவளர் சீரேந்துங் காமாட்சி
ஐயேந்து நின்பதஞ்சா ராறேந்த வைத்தருளே. (௪௬)

வைத்தவிரு நன்னிதியம் மாறாமற் பெற்றாலுஞ்
சுத்தவிருக் காதி சுருதிகளுங் கற்றாலுஞ்
சித்தவிரு டீர்க்குந் திறனுளரோ தஞ்சையிடை
ஒத்தவிருங் காமாட்சி யுன்கருணை யல்லாதே. (௪௭)

அல்லமருங் கார்குழலா ராடையணி யின்மயக்குங்
கல்லமருங் கொங்கைமுகங் கண்மயக்குந் தீர்வதற்கு
நல்லமருந் தொன்றுலகி னான்கண்டேன் றஞ்சைபுரி
யில்லமருங் காமாட்சி யெந்தாய்தாட் சிந்தனையே. (௪௮)

சிந்தனைவாக் குந்தழுவாச் சிற்பரையே வெற்பரையன்
நந்தனையாய் தஞ்சை நகர்மேவுங் காமாட்சி
வந்தனைசெய் துன்றாள் வழுத்தியுள் ளைந்துருகும்
எந்தனையாட் கொள்ள விதுதருணங் கண்டாயே. (௪௯)

கண்டக்கா ரேய்ந்தநுதற் கண்ணனொடு சேவிலுனைக்
கண்டக்கா லன்றிவினைக் கட்டகலு மாறறியேன்
கண்டக்கா ரந்தேன்பாற் கட்டியெனத் தஞ்சைநகர்க்
கண்டக்கா ரேத்தவருங் காமாட்சி யம்பிகையே. (௫௰)

வேறு.

அம்ப ராவணி யெம்பெரு மாட்டியை
யகிலகா ரணத்தாளை

நம்ப ராநந்த வாரியைத் தஞ்சைமா
நகருறை செழுந்தேனைச்
செம்ப ராபர நங்கைகா மாட்சியைச்
சிந்தனை செயினெஞ்சே
உம்ப ராதியர்க் குணர்வரு மறைமுடி
வுண்மையைப் பெறலாமே. (௫௧)

உண்மை யொன்றுகே ணெஞ்சமே யினியுட
லுற்பவ மறவேண்டில்
திண்மை யொன்றிய சித்தரு முத்தருந்
தினந்தினந் தொழுதேத்தும்
வண்மை யொன்றுசீர்த் தஞ்சையி லெழுந்தகா
மாட்சிபொன் மலர்த்தாளிற்
கண்மை யொன்றியிவ் வகிலவா சனையகன்
றலைவற விருப்பாயே. (௫௨)

இருக்க வோரிட நமக்கென வுணர்வுறு
திகத்தலை வுறலூழைப்
பெருக்க வோநிறை யறிவினையொருக்கவோ
பிற்படும் வாழ்நாளைச்
சுருக்க வோநிகழ்த் துள்ளமே யுண்மைதுந்
துபிமுத லியதாள
வருக்க வோசையார் தஞ்சைவா ழும்மைகா
மாட்சிதா மரைத்தாளே. (௫௩)

தாள டைந்தவர்க் கிட்டசித் தியைத்தருந்
தஞ்சைமா நகர்மேவும்
வாள டைந்தமைக் கண்ணிகா மாட்சிதாள்
வழுத்துறப் பெறினெஞ்சே

கோள டைந்திடா தோரணு வேனும்வெங்
கூற்றுவன் விடுக்குந்தூ
தாள டைந்திடா ரடைந்திடா தினியுட
லாக்குநான் முகனேக்கே. (ருச)

முகத்தி னேர்படுங் தவத்தினர்க் குள்ளமே
முழுமதிக் குடையோனம்
பகத்தி னேர்படாத் திறமருள் பார்ப்பதி
யமலசுங் தரிவீரி
சகத்தி னேர்படாச் சீர்த்திசேர் தஞ்சையங்
தலத்துறை காமாட்சிக்
கெத்தி னேர்படத் தொழும்பமைத் திருப்பதே
விருந்தவ மெனக்காணே. (ருரு)

காணி லங்கம லங்கனல் வளிவெளி
கதிர்மதி யுயிராயிங்
கேணி லங்கதி லாண்டமாய்த் தஞ்சையி
லெழுந்தருள் காமாட்சி
சேணி லங்கரு ளெய்துமா றெவணெனத்
தேர்வுறு திவணெஞ்சே
வீணி லங்கமே னெடுத்துழைத் தாய்புனல்
விழற்கிறைத் தனவாங்கே. (ருசு)

ஆம்ப லஞ்சமா ரகழிசூழ் தஞ்சைவா
ழம்பிகை காமாட்சிக்
காம்ப லஞ்சலி புரிந்துநெக் குருகிநல்
லலர்கடூஉய்ச் செழும்பாவாற்
றேம்ப லஞ்சருக் கனைகிகர் துதிசிதஞ்
செய்துபா டுடனுனென்

ஞேம்ப லஞ்சன நிறச்சமற் காட்படு
வோர்க்குள செயனெஞ்சே. (௫௭)

நெஞ்ச மேதஞ்சை மன்னுகா மாட்சியெங்
நேரமு நின்பாலிற்
கொஞ்ச மேனுமன் னியமற மருவிய
கொள்கைநீ யுணராமற்
றஞ்ச மேய்ந்துமா மாயையி னழுந்தியிச்
சகத்துழல் வதைநோக்கிற்
கஞ்ச மேவினேற் கின்னமு நெடுந்தொழில்
காட்டவோ வறியேனே. (௫௮)

எனை யொன்றினும் வேட்புறு ருள்ளமே
யிகபரத் தெஞ்ஞான்றுந்
தானை யொன்றிருந் தலைவர்நின் றடிதொழுந்
தஞ்சைவாழ் காமாட்சி
வானை யொன்றிய முழுமதி முகத்தையு
மணிச்சிலம் பொலியார்க்குந்
தேனை யொன்றிய வாரிசத் தாண்மலர்ச்
சேவையுங் கண்டோரே. (௫௯)

கண்டகக்கரக் கண்ணனும் போற்றும் வெண்
காப்பணிந் தொளிர்நெற்றிக்
கண்டகக்கரத் தான்மதற் காய்ந்தவே
காம்பரன் மகிழ்தஞ்சைக்
கண்டகக்கர வணிகொள்கா மாட்சியங்
கழற்சிலம் பொலிச்சேவை
கண்டகக்கர வகன்றிடி னெஞ்சமே
கதிபிறி திலையொன்றே. (௬௦)

வேறு.

ஒன்றெ னக்கழ றொண்மறை நிண்ணய
மோர்ந்து ணர்ந்தநல் லுத்தம ருள்ளமே
மன்றெ னக்களி கொண்டுறை தஞ்சைக்கா
மாட்சி யுன்னை மறந்தா விழந்தவோர்
கன்றெ னக்கத றித்திரிந் தெய்த்தனன்
கருணை யாஞ்செங் கதிருதித் தின்றொரு
நன்றெ னக்கருள் செய்வதென் றென்னுள
நளின வண்முகை நாடொறும் பூக்கவே. (௬௧)

பூக்குங் காலம் புறத்தகத் தும்மணம்
போதக் காட்டும் பொதும்பரைப் போலெனைக்
காக்குங் காலங் கலந்திடின் மெய்க்குறி
காட்டு வாயென் கருத்திற் கிணங்கவே
தாக்குங் காலங் கடந்தகு ணாகரி
சர்வ சீவ தயாபரி நான்மறை
வாக்குங்காலமெ லாந்திகழ் தஞ்சைக்கா
மாட்சி யற்புத வல்லிமுக் கண்ணியே (௬௨)

கண்ணுக் குள்ளொளி யாகிய நற்சிவ
காம சுந்தரி கன்னி மனோன்மணி
மண்ணுக் குள்ளொளிர் தஞ்சையின் மன்னுகா
மாட்சி யென்ன மதித்தடி யார்தமிழ்ப்
பண்ணுக் குள்ளொளித் தேத்தும் பராபரி
பண்பொ டென்னைப் பரவுறு மென்மனத்
தெண்ணுக் குள்ளொளித் தென்னை மயக்கிடா
தின்று வந்தெதிர்ந் தின்னருள் செய்வையே. (௬௩)

இன்ன நின் றிரு வுள்ள மிரங்கியிவ்
வேழை யேனின் னெழுத்தைந் தினைச்செபித்

துன்ன நின்றிடற் கோர்துணை செய்திடா
வோர மென்ன வுரைத்திதஞ் சைப்பதி
மன்ன நின்றின் படியர்க் குதவுங்கா
மாட்சி யேமனம் வெள்கிய ருஞ்சிறை
அன்ன நின்றிட முன்னடை காட்டுமெம்
மம்மை யேயரு ளாநந்த வாரியே (௬௪)

வார்பொ றுத்த தனத்தமு தைப்பொலன்
வள்ளத் தேந்திமுன் வள்ளலெனுந்திருப்
பேர்பொ றுத்த வருண்ஞான சம்பந்தப்
பிள்ளை யார்க்களி த்தாண்டிட வில்லையோ
பார்பொ றுத்த மகற்குளி யானுமோர்
பால னன்றோ பரமுனக் கில்லையோ
வார்பொ றுத்த முகிற்பொழிற் றஞ்சைக்கா
மாட்சி யேயிவண் வந்தரு ளென்முனே. (௬௫)

முன்ப மைந்த பெருந்தவப் பெற்றியோ
மூட னேனென் றிரங்கருள் வெற்றியோ
அன்ப மைந்த குருவரு ளாட்சியோ
அறிவு ளார்தந் தரிசனக் காட்சியோ
என்ப மைந்த சடத்தைப் பொறுத்தவிவ்
வேழை யேனல் விலக்கணத் தோரென
வன்ப மைந்த திருத்தஞ்சை மன்னுகா
மாட்சி பாதம் வழுத்தக் கிடைத்ததே. (௬௬)

கிடைத்த லங்க மரிதென நூன்மொழி
கேட்ட றிந்து மறிந்திலர்போலவே
படைத்த லங்கம லற்கிவ ணெய்வுறப்
பண்ணு நின்றிருக் கோயில் வலம்வரா

கடைத்த லங்களிற் சுற்றிநின் றென்பலன்
காணு வார்களோ காணேன் கயற்குலம்
மடைத்த லங்களிற் பாய்தஞ்சை மன்னுகா
மாட்சி யேதமிழ் நாடன் குமாரியே. (௬௭)

மாரி யுண்டு மகிழ்முகிற் றஞ்சைக்கா
மாட்சி நின்னருள் வாரியை யன்பொடும்
வாரி யுண்டு மலத்தக மா றியான்
மாம லர்க்கண் மருவும்பீ தாம்பர
தாரி யுண்டுமி ழண்டம னைத்தையுந்
தாணு விற்புரு டன்னெனக் கண்டிவண்
வேரி யுண்டுவப் பேறுஞ்சு ரும்பர்போன்
மெய்வி திர்த்துனை வேண்டவ ருள்வையே. (௬௮)

வைய கத்தினில் வாழ்க்கையு மொன்றிலேன்
மாச கன்ற துறவினு நின்றிலேன்
பொய்ய கத்திற் பொருந்தி யிடைப்படும்
புன்மை யேனைப் புரப்பதெந் நாள்கொலோ
மெய்ய கத்திய மாமுனிக் கோதிய
வேற்கு மாரனை யீன்றகு மாரியே
மைய கத்தினர் மன்னருந் தஞ்சைக்கா
மாட்சி யேபர மானந்த மங்கையே. (௬௯

மங்க லந்திகழ் தஞ்சையின் மன்னுகா
மாட்சி பாத மலரை யகந்தைகா
மங்க லந்திகழ் வுற்றிவ ணாடொறும்
வையத் துண்மத வாரணம் ஞாளிதூ
மங்க லந்திக லுற்றறி வற்றிரு
மாந்த லைந்துநு ழைந்திருந் தோய்ந்துமெய்

மங்க லந்திகந் தந்தொறுங் காட்டுவார்
மன்னு வார்களோ மாசில ரன்றியே. (௭0)

வேறு.

அன்று மான்மியத் தறங்களெண் ணான்கமைத் தனைநீ
என்று மாசன மியம்புத லிழுக்குறு தெளிவந்
தின்று மாநிலத் தென்றுயர் தீர்ப்பதொன் றியற்றாய்
ஒன்று மாசிலாத் தஞ்சைக்கா மாட்சிமா துமையே. (௭௧)

மாத வந்தழை தஞ்சைவா ழும்மைகா மாட்சி
போத வந்தனிற் போக்கிநீ ரிடிகரை பொறுத்த
பாதவந்தனை நிகர்த்தன னினியுனைப் பரிவோ
டோத வந்தனை செயத்தரு வாய்நிறை யுணர்வே. (௭௨)

நிறை முடித்தலை வருஞ்சடை முடியரு நிகழ்த்தும்
மறை முடித்தலை வியங்கிநற் றஞ்சையில் வதியும்
பிறை முடித்தலை யம்மைகா மாட்சியான் பிதற்றுங்
குறை முடித்தலைப் புரிதிநின் றிருவுளங் குளிர்ந்தே. (௭௩)

உளங் கனிந்துனை யுன்னியா னுய்வுறு துலகில்
விளங் கனித்தியப் பொருளைவேட் டுழல்வதென் விதியோ
வளங் கனிந்தநற் றஞ்சைவா ழும்மைகா மாட்சி
குளங் கனிந்ததேன் பான்மொழி மருவுபூங் குயிலே. (௭௪)

மருமலர்க்கணன் றருமலர்க்கணையனென் வயின்செய்
தருமலக்கமுந் தந்தைதாய் முதலியோர் தம்மால்
வருமலக்கணு மாற்றிநற் றஞ்சைக்கா மாட்சி
கருமலக்கட மினியுறுதருள்பர கதியே. (௭௫)

கதிக்குநாகமோ வளைகையோ வெனப்பலர் கருத்தான்
மதிக்குந்தஞ்சைவாழ் மாதுகா மாட்சிதாண் மலரைத்
துதிக்கு மன்பர்நோக் கனற்குமாண் மகிடமேற் றோன்றும்
பதிக்குமஞ்சுறு தஞ்சுறூஉம் படிறுரைப் பவர்க்கே. (௭௬)

உரைக்கு மாகமத் தொழுக்கினி லிழுக்குறு ருளத்தா
மரைக்குண் மேவிநற் றஞ்சைவா ழம்மைகா மாட்சி
தரைக்குளுப்புமால் வரைக்குநே ரெனதிரு தயத்தைக்
கரைக்கு நின்னருள் வெள்ளநீர் பெருகிலக் கணமே. (௭௭)

கணங்குலாவிமுற் கலைவலோர் சொலுஞ்செயுட் கவின்சீர்
மணங்குலாவியற் றஞ்சைவா ழம்மைகா மாட்சி
அணங்குலாவுமென் னகத்தின்மா லணுகுறு துயரா
வணங்குலாவுமொண் சுடரகத் திருள்புகா வணம்போல். (௭௮)

போதமுண்டகம் பொருளிரண் டுண்டுயர் புவிக்கண்
நீதமுண்டகண் டாநந்தப் பேரரு ளிலையுண்
டாதமுண்டகல் தஞ்சைவா ழம்மைகா மாட்சி
பாதமுண்டகப் போதிலெப் போதுமாழ் பவர்க்கே. (௭௯)

ஆழியானனத் தயன்புகழ் தஞ்சையுற் றருட்கண்
ஆழியானன மலர்புரை யம்மைகா மாட்சி
ஆழியானன ரங்குலிக் கணிந்துளா யுலகில்
ஆழியானன வரதமின் புறப்புரி யன்பே. (௮௰)

வேறு.

அன்பா லுரு கித்தொழு நால்வருக் கன்றுவந்தே
தென்பா லுகந் துன்றுணை வன்னருள் செய்யவின்றே
வன்பா லுயர் தஞ்சையின் மன்னுகா மாட்சியேயிங்
கென்பா லுனக் கின்னுமி ரக்கமி லாததென்னே. (௮௧)

என்னு ரிய னுயி ராயுல கெங்குமாகி
மன்னு ரியர் தஞ்சையின் மன்னுகா மாட்சியேயான்
மின்னு ரியர் மெய்யைம லந்துயர் மித்தையென்றுள்
உன்னு ரிய லும்பய னிதென் றுணர்ந்திலேனே. (௮௨)

உணங்கேன் முக மெய்தலு முதனை யுன்னிநாளும்
பிணங்கே னெவ ரோடு செய் தாலுநின் பெற்றியென்றே
இணங்கே னினக் கன்பிலர் பாலுல கெங்கணுஞ்சேர்
மணங்கேழ் திருத் தஞ்சையின் மன்னுகா மாட்சியம்மே. (௮௩)

மேனோக்குடை யோரென மேதினி மீதுநாயேன்
பானோக்குத னின்கரு ணைக்குள பான்மையன்றே
மானோக்குடை தஞ்சையின் மன்னுகா மாட்சியேநீ
யானோக்குற வாயினும் வந்தரு ளின்றுவந்தே. (௮௪)

இன்றோர்ந்திடி னெங்கு மிருந்தறிந் தின்புமாகி
நின்றோர்பிறி வற்றொளிர் நீயென்க ணேயமேவின்
மன்றோர்புகழ் தஞ்சையின் மன்னுகா மாட்சியேதுன்
பென்றோர்பெய ருள்ளதுண் டோவிவ ணேழையேற்கே (௮௫)

ஏழைக்குலை யாநிதி தந்தருளெம் பிராட்டி
ஊழைக்குலைத் தின்றெனை யாட்கொள லுன்பரஞ்செவ்
வாழைக்குலை சாய்கமுகிற்பணை வாளைபாயும்
மாழைக்குல மேவுறுந் தஞ்சைக்கா மாட்சிமானே. (௮௬)

மானந்தருந் தஞ்சையின் மன்னுகா மாட்சியேமெஞ்
ஞானந்தரு வாயென நின்பத நம்பிநில்லேன்
தானந்தரு மம்புரி யேன்செயச் சார்புமில்லேன்
ஈனந்தரு மாலகன் றெற்குறு மின்பமென்றே. (௮௭)

இன்பேரங் குறு நின்பது மப்பத மேத்தியேத்தி
அன்போங்குள ளுய்த்தின நின்றிட லன்றியின்னும்
வன்போங்குயர் தஞ்சையின் மன்னுகா மாட்சியேயான்
என்போங்குட லெய்தினு மற்றதொன் றெண்ணிலேனே. ()

எண்ணம்பல வாயுழன் றேங்குறு மென்கணன்பாய்
நண்ணலம்பலக் கூத்துகர் தோங்கிய நாட்டம்வையுன்

கண்ணம்பல வன்பரைக் காக்குமெய்க் காட்சியன்றோ
வண்ணம்பல வாயுயர் தஞ்சைக்கா மாட்சிமாதே. (௮௯)

மாதங்கம ரும்பொரு ளென்பருன் வண்ணமுன்னு
மாதங்கம ருந்தென நாடுமுன் மத்தரன்றோ
மாதங்கம ருப்புற முந்துணை வார்குயத்தாய்
மாதங்கம ருப்பொலி தஞ்சைக்கா மாட்சியன்னே. (௯௦)

வேறு,

அன்ன மன்னியெழு மண்ண றன்பதமு
மந்த ரத்தமர ரின்பமும்
இன்ன மன்னியர்க ணண்ணு மொன்றிலையும்
யாண்டும் வேண்டிலே னம்மவென்
உன்ன மன்னியொளிர் பொன்னை யன்னனின
துபய செஞ்சரண மன்றியே
வன்ன மன்னிவளர் தஞ்சை மன்னுகா
மாட்சி யேச்ருவ சாட்சியே. (௯௧)

சருவு றுதகிதி யொருவு றுதமதி
தடையு றுததயை சந்ததம்
பொருவு றுதசுக மொழிவு றுதபுகழ்
பொய்யு றுதமொழி வையமீ
துருவு றுதவர மிவைய னைத்தையு
முவந்தெ னக்கருடி யன்பிலார்
மருவு றுதிலகு தஞ்சை மன்னுகா
மாட்சி யேயடியர் காட்சியே. (௯௨)

அடிபொ றுத்துமடி முடிபொ றுத்திடமண்
ணதையெ டுத்துநின தண்ணலார்

வடிபொ றுத்தமல ரடிகொ டுத்துமுனம்
வாத வூரரையும் வித்தனர்
மிடிபொ றுக்கவினி முடிபொ றுத்திடா
வினையி னேன்முடியு னிணைமலர்
அடிபொ றுத்திடவை தஞ்சை மன்னுகா
மாட்சி யற்புதவி சாலியே. (௩௩)

சால மோகமல மேல மர்ந்தவிதி
தந்த தொந்தவினை யால்வருங்
கோல மோகலியின் மூல மோநினது
கொள்கை யோவறிகி லேனிவண்
ஞால மோகமதி லேழை யோர் களென
நானி யன்றுலைத விப்பெருஞ்
சால மோகமற ஞான வாளுதவு
தஞ்சை மன்னுகா மாட்சியே. (௩௪)

மன்ன ரும்பர்புகழ் தஞ்சை மன்னுகா
மாட்சி நின்சரண் வழுத்தினோர்க்
குன்ன ரும்பரம வின்ப மேவுமென
வுள்ள தாகுமெனி லின்றுநின்
தென்னரும் பனைய தந்த வாயிதழ்
திறந்து நல்லுறுதி செப்பியென்
பன்ன ரும்பழைய வல்வி னைத்துணிகள்
பாறும் வண்ணமருள் பாலியே. (௩௫)

பால னைப்பரி பவத்து ருதபடி
பண்டை நாளுனது கொண்கனார்
கால னைப்பரிமண் வீழ்த ரப்புரிதல்
கண்டு மென்கணருள் வைத்திடாய்

மால னைப்பரிகொ டஞ்சை மன்னுகா
மாட்சி நீபமலர் மாலைவேய்
வேல னைப்பரிவி னோடு பெற்றவருண்
மெல்லி யேயமல வல்லியே. (௬௬)

வல்ல மைக்குளுயர் தஞ்சை மன்னுகா
மாட்சி நின்கமல வதனமும்
நல்ல மைக்குழலு மருள்சு ரந்தவிரு
நயன மும்பணிகொண் மருமமும்
மல்ல மைக்குநிகர் தோளு மீரிரு
மலர்க்க ரங்களுமெ னெஞ்சகத்
தில்ல மைக்குமிரு தாளு மைந்தனே
னென்று மேத்தவருள் செய்வையே. (௬௭)

ஏக மாயுலக மேழி ரண்டினு
மியங்கு பற்பலவி னோதமாய்
மாகமா யுலவை வன்னியம் புவியை
வண்ண மாயுய ரருட்பிர
வாகமா யுலவு தஞ்சை மன்னுகா
மாட்சி மெய்யருளை யன்றியே
தாக மாயுல கியன்ற வின்பநிலை
சார வல்லவர்க ளியாவரே. (௬௮)

ஒரும னந்தமனை யொளிகொ டஞ்சைவளர்
மாட்சி மேவுகர மாட்சிபால்
ஒரும னந்தமூவி யைந்தெ ழுத்தைநித
முச்ச ரிக்குமவ ருக்கெலாம்
பரும னந்தன்முடி வைகு ம்ண்கணிரு
பாணி ரண்டொடொரு பானறம்

தரும னந்தபத சுகமு மொப்பிலுப
சாந்த வாழ்வுமெளி தாகவே. (௯௯)

தான மேவலரு நண்ப ராயொழுகு
தஞ்சை மன்னுகா மாட்சியரன்
தான மேவலரு காத நாண்மலர்கள்
சாத்தி நின்கழலை வாழ்த்துதல்
தான மேவலரு மாசை யோடெனது
தாச னென்றவனி மீதயி
தான மேவலருண் மோன முத்திபெறு
சார்பெ லாமுனது சீர்மையே. (௧00)

வாழி.

தஞ்சைநகர் வாழியரு மறைநூல் வாழி
சாதுசங்கம் வாழிமணி நீறும் வாழி
விஞ்சுபுக ழிப்பதிற்றுப் பத்தந் தாதி
விருப்பமுடன் கற்றோர்கேட் டோர்கள் வாழி
அஞ்செழுத்தும் வாழிதிரி யம்ப கத்தோ
னருள்வாழி யம்பிகைகா மாட்சிதூய
மஞ்சுலவு மலர்த்தாளென் சென்னி மீதும்
மனத்தடத்து மனவரதம் வாழி வாழி.

பதிற்றுப்பத்தந்தாதி

முற்றிற்று.

சிவமயம்.

காமாட்சியம்மை கலிவெண்பா.

காப்பு.

நேரிசைவெண்பா.

பூமாட்சித் தஞ்சைப் புரிமேலை வீதிவளர்
காமாட்சி யம்மை கலிவெண்பா—யாமாட்சி
கொண்டிசைத்தற்காந் துணைபோர்கோட்டைங்கரப்பெருமான்
வண்டிசைத்தண் பூந்தாண் மலர்.

கலிவெண்பா.

நூல்

மாமேவு நான்மறையின் வாக்கியத்தி னுட்பொருளாய்
ஆமேவு மம்மொழிக்கு மப்பாலாய்த்-தூமேவும் (க)
பூரணமாய் நித்தமுத்த புத்தமா யெவ்வுயிர்க்குங்
காரணமா யத்துவிதக் காட்சியாய்ப்-பேரணியும் (உ)
அச்சுதமாய் நிச்சயமா யக்கரமாய் நிட்களமாய்
உச்சிதமா யோங்காரத் துள்ளொளியாய்-மெச்சுறுசிற் (௩)
சத்தாய்ச் சுகமாய்த்தற் சாட்சியாய்ச் சான்றமுத்தி
வித்தாய்ப் பெருங்கருணை வெள்ளமாய்ச்-சுத்தோப (௪)
சாந்தமாய் நிற்குணமாய்ச் சத்துவமாய்த் தத்துவமாய்
வாய்ந்தபர மாநந்த வஸ்துவாய்-ஆந்துரிய (௫)
வீட்டிற் கொருவிளக்காய் மெய்ப்பயன்றேர் விற்பனர்தம்
பாட்டிற் புதைந்த பழம்பொருளாய்க்-காட்டரிய (௬)

அம்பரமாய் நித்ய வபரோட்ச மாயகண்ட
தம்பிதமா யொன்றாய்ச் சதசத்தாய்ச்-சம்பனுவாய்க் (௭)

கேவலமாய்ச் சர்வ கெதமாய்ச் சிவமாய்நிட்
பாவனமாய்ச் சாலுமனூற் பன்னமாய்த்-தாவிலருட் (௮)

டாபிதமாய்ச் சர்வாதிட் டானமாய்ச் சுத்தசுயஞ்
சோபிதமாய்ச் சூட்சாதி சூட்சமாய்-ஞாபகத்துக் (௯)

காதியா யப்பிரமே யப்பொருளா யொப்பினிரு
பாதியா யாதி பரம்பரமாய்-ஓதியுணர் (௧௦)

சித்தாந்தத் தண்முடிபாய்ச் சின்மாத் திரவடிவாய்
முத்தாந்த மோன முழுமுதலாய்ச்-சத்தானு (௧௧)

வித்தமாய்ச் சர்வ விலட்சணமா யோங்குபிர
சித்தமாய் முப்பதத்தா திக்கமாய்-நத்துந் (௧௨)

திருக்காய்ப் பரதுரியா தீதமாய் நிற்றல்
இருப்போ டெழுத விலதாய்-விருப்புவெறுப் (௧௩)

பண்மையொடு செய்மைமுத லந்தநடு வில்லாதாய்
வெண்மைமுத லைவணங்கண் மேவாதாய்த்-தண்மையுடன் ()

வெப்பமில தாயுள் வெளிகீழ் வலமிலதாய்
ஒப்பிலதாய் முக்குணங்க ளொன்றாதாய்ச்-செப்பலுறும் (௧௫)

எண்ணுக் கடங்கா வியற்கையாய் நாமமுரு
அன்னுமன வாக்கிற் ககோசரமாய்-நண்ணுமவி (௧௬)

காரமாய் வேதா கமத்தி னடுவெழுந்த
சாரமா யாரமுதாய்த் தற்பரமாய்-ஒரும் (௧௭)

அகர்த்தத் துவமா யகண்டிதமாய்த் திவ்ய
மகத்துவமாய்த் தேசோ மயமாய்-மிகுத்துலவும் (௧௮)

அற்புதத்திற் கற்புதமா யந்தரத்திற் கந்தரமாய்க்
கற்பனைமுக் காலங் கடந்ததுவாய்க்-க்ற்பிலகும் (௧௯)

ஐந்துவித சத்திகளா யண்டபகி ரண்டமெலாந்
தந்துலவும் பல்கோடி சத்திகளாய்-விந்தமதை (௨௦)

வில்லாக்கி முப்புரங்கள் வேவநகைத் தேறூர்ந்த
வல்லாளன் பங்கிலுறை வல்லியாய்த்-தொல்லாழி (௨௧)

நீர்பூத்த கொண்மூ நிறத்தோ னுரத்தோங்கும்
எர்பூத்த பொற்பாவை யின்கருணை-ஆர்பூத்து (௨௨)

வீற்றிருக்குந் தன்மை விளங்கிடுமா றெல்லோர்க்குந்
தோற்றிவிக்கும் வான்றோய்பொற் றூய்மதிலும்-நாற்றிசையுங்

கந்தமலி மைக்கூந்தற் காரிகையார் நின்றுலவும்
விந்தைவிந்தை யானமணி மேடைகளும்-ஐந்தருவார் (௨௪)

ஆகண் டலனகர்போ லந்தரநற் றுந்துபிகள்
சேகண்டி பல்வாச் சியமுழக்கும்-ஓசைமலிந் (௨௫)

தந்தணர்நின் றோது மருமறைக ளின்றொனியும்
பைந்தமிழ்தேர் பாவலர்சொற் பண்ணொலியும்-முந்துட ()

மாதர்மயி லாட மழைநே ரியத்தொனியும்
மோதுதிரை வேலை முழக்கெனவெப்-போதுமதிர் (௨௭)

தேவா லயம்பலவுஞ் சேர்ந்திலகுந் தஞ்சைநகர்
மேவா ரணர்மேலை வீதியிடை-ஓவாப்பே (௨௮)

ரன்புகந்து தொண்டருட னண்டரும்வந் தஞ்சலிசெய்
தென்புருகிச் சந்நிதிநின் றெந்தாயே-தென்பாண்டித் (௨௯)

தேயத் திறைவதனச் செங்கமலம் பூக்கவந்த
சேயத் தினமணிநேர் செல்வியே-தூயதிரை (௩௦)

அம்புதியிற் கண்டுயின்றை யாயுதங்கை மேவியகல்
அம்புவியை யோரடியா ல்ன்றளந்த-அம்புயக்கண் (௩௧)
மாலோன் சகோதரியே வன்னமயி லேறுமயில்
வேலோன் றனைப்பயந்த வித்தகியே-பாலோங்கும் (௩௨)

முத்தே மதிகதிர்தீ முக்கணுடை மெய்க்கரும்பே
சித்தேமுத் தேவர் சிகாமணியே-சித்தாந்த (௩௩)
போதப் பயிர்தழையப் பொங்கியெழும் பேரருளாஞ்
சீதமழை பெய்யுஞ் செழுமுகிலே-சாதனத்தான் (௩௪)

முந்தைமலம் போக்கி முதுஞான மேனியுற்றோர்
சிந்தைமல ருள்ளுறையுஞ் செந்தேனே-அந்தமிகுஞ் (௩௫)

சங்கரியே துங்கபரா சத்தியே யுத்தமியே
மங்கலையா நந்தி மனோன்மணியே-கொங்கவிழுந் (௩௬)
தண்ணார் கமலா தனத்துறையும் பைங்கிளியே
எண்ணான் கறம்வளர்த்த வேந்திழையே-விண்ணாடர் (௩௭)

தங்குறுவான் முற்பகலிற் றுருகா சூரனுடல்
மங்குறச்செய் வித்தபெரு மாட்டியே-அங்கரக (௩௮)
பாலியதி பாலிபரி பாலிகோ பாலிதிரி
சூலியனு கூலி சுதந்தரியே-மாலினியோங் (௩௯)
காரியதி காரிசிவ காமியபி ராமிகவு
மாரிகுற மாதுமணி மாமியே-வீரியுமா (௪0)
தேவி சுமங்கலிநற் றிவ்யகுண ரஞ்சிதசஞ்
சீவிமக மாயி திகம்பரியே-மாவிமலி (௪௧)
அந்தரியே காமக்கோட் டத்தியயி ராணிசிவ
சுந்தரியே காந்த துரந்தரியே-உந்தருண்மா (௪௨)

மேருவே யிம்பரும்பர் வேண்டுவன யாவுமருள்
தாருவே யெப்பொருட்குந் தாரகமே-காருலவுந் (௪௩)

தூலமுறு வன்மகிடா சூரனுட றன்னையலங்
கோலமுறச் செற்றதிறற் கோதையே-ஞாலமிசை (௪௪)

மேவடியார்காண வியன்காஞ்சி மீதெழுந்த
மாவடியார்ப் புல்லு மரகதமே-மூவர்புகழ் (௪௫)

ஆரணிமா தங்கி யகிலாண்ட மும்படர்ந்த
எரணிமெஞ் ஞான விளங்கொடியே-கோரணியாப் (௪௬)

பன்னுலகெ லாமீன்றும் பற்றிலாத் தன்மையினாற்
கன்னியெனப் பேர்பூண்ட காரணியே-மன்னுருக்கொண் ()

டாருயிருக் கின்பளித்தா ளன்பா லருளெனுமோர்
பேருயர்ந்த தெய்வப் பிராட்டியே-சீருயர்ந்த (௪௮)

பூமகளுங் கோமகளும் பொன்மாதும் பன்மாதும்
நாமகளுங் கண்டுதொழு நாரணியே-யாமளையே (௪௯)

அம்பிகையே சக்கரத்து ளக்கரஞ்சேர்த் துண்ணுடி
நம்பினவர்க் கின்புதவு நாயகியே-செம்பொனென்றே (௫௦)

பன்னுணுக் கூறும் பரியாயப் பேர்புனைந்தாங்
கென்னாட்டும் பற்பலபே ரேய்ந்திலங்கும்-முன்னுன (௫௧)

எங்கள்குல தெய்வதமே யேகாம் பரத்தாளே
புங்கவியே யென்றும் புராதனியே-அங்கயற்கண் (௫௨)

மின்னே நிறைமதியே மெய்த்தவத்தி னற்பயனே
பொன்னே நவமணியே பூங்குயிலே-எந்நாளும் (௫௩)

பூமாலை பொன்மாலை பொய்யாத செய்யதமிழ்ப்
பரமாலை சூட்டு பவருளத்தின்-மாமாலைத் (௫௪)

தீர்க்கு மணிமருந்தே தீட்டரிய ஓவியமே
ஆர்க்குமணிச் சிவரத்தி ஞ்சுரமே-கார்ப்பணுகா (௫௫)

முக்கனியே கண்டே முனிவகன்ற மாமுனிவோர்
கைக்கனியே யெற்கினிய கண்மணியே-மெய்க்கருணை (௫௬)

தந்தாளே கொந்திதழித் தாராளே பாரிலெதிர்
வந்தாளே கொங்கையணி வாராளே-முந்தாலம் (௫௭)

உண்டாளே யாருமுலை யுண்ணாளே யெண்வடிவங்
கொண்டாளே யென்பிழையைக் கொள்ளாளே-எண்டிசையும்

நின்றாளே வஞ்சரகம் நில்லாளே நல்லமணி
மன்றாளே பார்வதியே மாதரசே-என்றிதையத் (௫௯)

தின்பமரீஇ யெஞ்ஞான்று மேத்தெடுக்க வீற்றிருக்கும்
அன்பமருங் காமாட்சி யம்மையே-தின்பதுமத் (௬0)

தாட்டுணையிற் பூட்டியபொற் றண்டைச் சிலம்பழகுங்
காட்டும் பவளவிரற் கண்ணழகுங்-கோட்டமுறுக் (௬௧)

கந்துகத்தை யொத்தகுதி காலழகும் புத்தகநேர்
தந்த புறந்தாட் சதுரழகும்-முந்தியெழுங் (௬௨)

கைத்தரா சொக்குமிரு காலின் பரட்டழகுந்
தத்துவராற் போன்றகணைத் தாளழகும்-நத்தலவன் (௬௩)

அன்ன முழந்தா ளழகு மரம்பையுறழ்
வன்னக் குறங்கின் வடிவழகுங்-கன்னலின்வின் (௬௪)

மாரனுட னேரா மருங்கழகு மம்மருங்கிற்
பாரமணி யொட்டியாணம் பட்டுடையுஞ்-சோவணிந் (௬௫)

தோங்கழகுந் தாங்குபுக ழுந்திச் சுழியழகும்
ஆங்கடையா லேயுமுத ரத்தழகுந்-தேங்குபுனன் (௬௬)

மன்னுதிரை யன்ன மடிப்பழகு மாற்றறியாப்
பொன்னம் பொருப்பைப் பொருவியெழுந்-துன்னதஞ்சால் ()

தண்ணெனன் களபநறுஞ் சாந்தம் புனுகணிந்து
வண்ணப் பொறிபடர்ந்து வார்பூட்டி-அண்ணாந்து (௬௮)

வீங்கித் திரண்டடர்ந்து மேனீலக் கண்டேங்கா
தோங்கி யிறுமாந் தொளிகான்று-தூங்கணிமுத் (௬௯)

தாரமணி யாணிப்பொன் னாரஞ் சுமந்தகலஞ்
சாருமிரு கும்பத் தனத்தழகும்-வேரணிசர் (௭௦)

தோளழகும் யாழ்நிகர்த்துச் சொன்னத் தொடிபூண்டு
தாளடைந்தோர் கட்கபயஞ் சந்ததந்தந்-தாளுமுனங் (௭௧)

கையழகுஞ் செவ்வியசெங் காந்தளினங் கையழகும்
ஐவருக்கு மைந்தொழிற்றந் தாழியொளி-தைவந்து (௭௨)

நிற்குங் கெளிற்றி னிரலங் குலியழகும்
நற்கிளிமூக் கேன்ற நகத்தழகும்-பொற்கலன்கள் (௭௩)

மங்கலநாண் சார்கமுகை மானு மிடற்றழகும்
பங்கமிலாத் தொண்டைப் பழநிகர்த்துத்-துங்கமிகுஞ் (௭௪)

செவ்வா யழகுஞ் செழுந்தரளப் பந்தியழ
கொவ்வா வெயிற்றி னெழுங்கழகுந்-தவ்வாங் (௭௫)

கரும்பமுது முக்கனிதேன் கற்கண்டு பாகில்
வருஞ்சுவைக்கு மேலா மதுரந்-தருஞ்சுவையாய்த் (௭௬)

தந்திரிவா யூதுகுழ றத்தைகுயி லின்மொழிமற்
றெந்தவகை யின்றொனிக்கு மின்றொனியாய்-மந்தணமாம்(௭௭)

முன்மறைக ணான்கின் முடிபை யடியவர்க்கு
நன்மையுறக் கூறுமணி நாவழகும்-மென்மைதருந் (௭௮)

இஞ்சுகநேர் முத்தங் கிளரழகுந் தூயவிரு
கஞ்சனத்தை யேய்க்குங் கதுப்பழகும்-விஞ்சியெழும் (எகூ)

நீரகல மாழும் நிகழ்த்தற் கரிதாகிப்
பாரகண்ட மும்புரக்கும் பண்புடைத்தாய்-ஆரமுதந் (அ0)

துன்றுகட லொப்பாந் துணைநோக் கழகுமவை
ஒன்றுடனொன் றென்றும லோரணையாய்-நின்றகுமிழ் (அக)

நாசி யழகும் நவரத் தினத் தோடுண்
சேணிகர் கன்னத் தொளியழகும்-நேசமலிந் (அஉ)

துன்னுந் தொழும்ப ருளக்குமுதம் பூக்கவரும்
மன்னுங் கருணை வழிந்தொழுகிப்-பின்னமிலாக் (அங)

கோடி மதியுதயங் கொண்டதென வெக்காலும்
பீடிலகுஞ் சாந்தமுகப் பேரழகுங்-கூடுசிலைத் (அச)

திண்புருவத் தின்னழகுஞ் சிந்தூரப் பொட்டணிந்த
வெண்பிறைநேர் நெற்றி விழியழகும்-பண்பயிலும் (அரு)

வண்டினங்க ளுண்டுவக்கு மாமதுரத் தேன்றிமிர்ந்து
மண்டிவழி யுங்கடுச்சை மாலிகையுந்-தண்டாளக் (அசா)

கொத்தணிக ளேங்கிக் குலவுநுதற் சுட்டிகளுஞ்
சுத்த விளம்பிறையுந் தோன்றுறவேய்ந்-தெத்திசையும் (அஎ)

மேவு மியற்கைமணம் வீசிமக ராலயத்திற்
றுவியுண்ட மேகந் தனைவெருட்டிப்-பாவமிகுந் (அஅ)

துன்மைநெறி யுற்றுணரா தூனுடனு மென்றெணிப்பொன்
மண்மடவார் மூவாசை வாய்ந்துழலும்-பெண்மதியோர் (அகூ)

சித்தவிரு ளோட்டுந் திமிரநிறங் கொண்டிலங்கும்
மொய்த்தகருங் கூந்தன் முடியழகும்-வித்தநிறம் (கூ0)

ஆந்திதலை யெய்ந்தின் னருள்பூத்துச், சண்பகமும்
மாந்தளிரும் போன்ற வடிவழகும்-பாந்தள் (௯௧)

பரிக்கும் படியைப் படைக்கும் பதியைப்
பரிக்கு மெகினம் பழகத்-தெரிக்கும் (௯௨)

நடையழகுங் கேகயமு நாணடையுஞ் சாயல்
அடைவழகு மெஞ்ஞான்று மன்பாய்க்-கடையேன்கண் (௯௩)

டோர்படித்தா யுள்ள முலையா திருந்தனது
சீர்படித்தா னந்தநிலை சேர்வதற்குக்-கூர்படுநீள் (௯௪)

வேற்கண் மருவிவளர் வெஞ்சமனோர் வஞ்சியர்தம்
பாற்கண் மருவலுருப் பண்பிணையுந்-தோற்கடத்திற் (௯௫)

பெட்படைந்தான் றுய்த்துழன்றே பின்பதைக்கு மன்பதைகள்
நட்படையா வற்புடைய நன்மதியும்-உட்பகையோ (௯௬)

ராறு மொழியா தவிசாரி யானோர்கள்
கூறுமொழி கொள்ளாக் குணத்திறனும்-மாறுபடும் (௯௭)

வாதநூ லைப்பயின்று வாணாட் கழியாமற்
போதநூ லைப்பயிலும் புண்ணியமும்-ஓதலுறும் (௯௮)

நித்தியா நித்தியத்தி னிண்ணயந்தேர்ந் தைம்பொறிவாய்ச்
சித்த மசத்திநெறி செல்லாமல்-நத்துமகன் (௯௯)

மண்ணாடர் வாழ்வுமுயர் வானாடர் வாழ்வுமுளத்
தெண்ணா திருக்கு மிருந்தவமும்-புண்ணாகம் (௧00)

வாய்ந்தநா ளாதி வருநா ளிதுகாறும்
போந்தசுக துக்கானு போகமெலாம்-மாந்துங் (௧0௧)

கனவிற் றினங்காணுங் கற்பனைபோற் கண்டே
நினைவிற் றிரிபடையா நெஞ்சும்-புனிதமுறு (௧0௨)

என்புரியூ னூடிமயி ரென்பவைக ளாற்பிணித்த
வன்பறுமொன் பான்வாய் மலக்கூடாய்-இன்பிடைக் (க0௩)

காணுஞ் செயலிலதாய்க் கற்பனைக்குக் காரணமாய்
ஆணலிபெண் ணோர்மூன் றடையாளங்-காணவருந் (க0ச)

தொல்வினைகண் மல்குஞ் சுமையாய்ச் சிவஞானச்
செல்வமிலார் வேண்டுஞ் சிறப்புடைத்தாய்ப்-பல்விதநோய் ()

வாழும் பொதுமனையாய் வஞ்சகமற் கண்டளவில்
வீழுமடி யற்ற வெறுந்தருவாய்ச்-சூழுமன (க0சா)

விட்டமெழு காய்நீ ரிடைக்காணும் புற்புதமாய்த்
துட்ட நனவளவிற் றேய்வதுவாய்ச்-சுட்டலுறுந் (க0எ)

தூராக் குழிநாப்பண் டோய்ந்தபெருங் காயமதாய்ச்
சோரா மருத்துத் தருத்தியதாய்-நேராகத் (க0அ)

தொட்டாற் றுடக்காம்புன் சுக்கிலமுஞ் சோணிதமுங்
கட்டான வூனக்கண் காட்சியாய்த்-தெட்டுறுவான் (க0கூ)

மின்னலினு நொய்தாய் வியர்வைமதங் கோழையழுக்
கின்னலிடும் பவ்வீ யிழிமுடைநீர்-என்னுமிவை (கக0)

ஒன்று நரகா யுதிப்பொடுக்க மெவ்வனமூப்
பென்றுரைக்கும் பல்சின்ன மெய்தியதாய்ப்-பன்றிகடம் (ககக)

பண்டிநிரப் புண்டிசெயும் பாத்திரமாய் நாய்நரிபேய்
மண்டபனன் காக்கைபுழு வன்கழுகும்-உண்டுவக்கும் (ககஉ)

ஆகார மாயுநிக ழன்னமய மாந்தூல
தேகாபி மானத் திருக்ககற்றிச்-சோகாதி (கக௩)

மன்னுப்சி தாகம் வலிமெலிவு செல்லலுறல்
டன்னலயர்ப் போத லுறையாமை-பன்னுமகங் (ககச)

காரமத மாற்சரியங் காமமறன் மோகாவி
காரந் துவேஷமிரா கம்முதலாய்-பாரின் (கக௫)

மருவுசுக துக்கங்கள் மானுவ மானம்
பரவுமிவை முக்கோசம் பற்றி-வருநினைவு (கககூ)

மட்டாகுஞ் சூக்கவுடன் மான மொருங்ககல
விட்டாங்கு சூனியமாய் வேறொன்றுஞ்-சுட்டலின்றித் (ககஎ)

தாக்குமா நந்தமயஞ் சார்ந்துவருங் காரணமாம்
ஆக்கையெனு மூன்று மவத்தையையும்-நீக்கியவைக் (ககஅ)

குப்பாலாய் மெய்யுணர்வா யொன்றுந் துரியநிலத்
தெப்போது நிற்கு மியல்புமருள்-முப்போதும் (ககக)

வந்தனைசெய் நின்னடியார் வாழியுல கம்வாழி
சந்ததமும் வாழியநின் றுருள். (க௨0)

கலிவெண்பா முற்றிற்று.

இந்நூலியற்றிய

ந. வீரபத்திரபிள்ளையா லியற்றி

அச்சிடப்பட்ட பிரபந்தங்கள்.

நெ.	பிரபந்தப்பெயர்.	புத்தக நம்பர்.
1	சிவாநந்தசுவாமிகள் நான்மணிமாலை	
2	ஷை மாலையந்தாதி...	க
3	ஷை வருக்கக்கண்ணிகள்	
4	ஷை திருவடிப்புகழ்ச்சிமாலை	
5	ஷை பதிகம்	
6	சதாசிவக்கண்ணிகள்	உ
7	பஞ்சாட்சரப்பதிகம்	
8	விக்கினேஸ்வரர்பதிகம்...	ங
9	வேலாயுதவெண்பா	ச
10	திருக்கரந்தைப்பதிகம்	ரு
11	சுப்பிரமணியர்தோத்திரம்	
12	வாலைமனோன்மணிப்பதிகம்...	சா
13	ஷை. போற்றிப்பத்து	
14	வன்மீகபுரம்-நித்தியாநந்தசுவாமிகள் பதிகம் ...	எ
15	காமாட்சியம்மைபதிகம்..	அ
16	கஜலட்சுமிபதிகம்...	கூ
17	நெஞ்சறிவுறுத்தல்..	கO
18	வாலசுப்பிரமணியர்பதிகம்	
19	ஷை இரட்டைமணிமாலை	கக
20	ஷை தோத்திரக்கண்ணிகள்	
21	வெள்ளைவிநாயகர்பதிகம்	
22	ஷை பஞ்சரத்திநம்...	
23	ஷை எச்சரிக்கைக்கண்ணிகள்...	கஉ
24	ஷை கலிவெண்பா....	
25	திருக்கருசாவூர் நான்மணிமாலை	
26	ஷை இரட்டைமணிமாலை.	கங
27	காமாட்சியம்மை பதிற்றுப்பத்தந்தாதி	
28	ஷை கலிவெண்பா...	கச